**நோர்த்-சீ லிமிட்டட்டின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை- 2021/2022**

---

நோர்த்-சீ லிமிட்டட்டின் (''கம்பனி'') 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

குறித்த சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் விதிகள் மூலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதிகளுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய காலத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த வேண்டும், மேலும் அவர் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

எனினும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட பொதுமுயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆளுகை சபையால் அங்கீகரிக்கப்பட்ட 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 இன் 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரச உடமையாக்கப்பட்ட பொதுமுயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், கம்பனி அதனுடன் இணங்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரை தீர்வை சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு | 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான முத்திரை தீர்வை சான்றுபடுத்தப்பட்ட சேகரிப்பு கூற்றுடன் சேர்த்து கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | சான்றுபடுத்தப்பட்ட சேகரிப்பு கூற்றுடன் சேர்த்து ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து பதினைந்து நாட்களுக்குள் முத்திரைத் தீர்வையானது ஆணையாளர் நாயகத்திற்கு காலாண்டு ரீதியாக அனுப்பப்பட வேண்டும். |
| 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 15 ஆம் பிரிவு | "இந்தச் சட்டம் பொருந்தக்கூடிய ஒரு ஊழியரின் தொழில்தருநர் இந்தச் சட்டத்தின் கீழ் அத்தகைய ஊழியரின் ஒவ்வொரு மாதத்திற்கான பங்களிப்பையும் அத்தகைய ஊழியரின் உழைப்புக்களில் இருந்து அடுத்த மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னர் கழித்து நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும்; மேலும் அத்தகைய ஊழியரின் சார்பாக அத்தகைய தொழில்தருநரால் நிதியத்திற்கு இந்த பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட பங்களிப்பு, அத்தகைய ஊழியரால் நிதியத்திற்கு செலுத்தப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்." அதற்கு மாறாக, 2020 யூலை முதல் 2022 மார்ச் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 37,507,750 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் கம்பனியால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | அத்தகைய ஊழியர்களின் உழைப்புக்களில் இருந்து அடுத்த மாதத்தின் கடைசி நாட்களுக்கு முன்னர் EPF கழிக்கப்பட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவு | "இந்தச் சட்டம் பொருந்தக்கூடிய ஒவ்வொரு ஊழியரினதும் தொழில்தருநர் இந்த | பதில் வழங்கப்பட வில்லை. | ஒவ்வொரு ஊழியரினதும் ETF அடுத்த மாதத்தின் கடைசி நாளிலோ |

| | | | |
|---|---|---|---|
| | மாதத்தின் போது அத்தகைய தொழில்தருநரின் கீழ் அவரது தொழிலில் அத்தகைய ஊழியரின் மொத்த உழைப்புக்களில் மூன்று சதவீதத்திற்கு சமமான தொகை பங்களிப்பு அத்தகைய தொழில்தருநரால் பணிக்கமர்த்தப்பட்ட அத்தகைய ஊழியர் ஒவ்வொரு மாதத்திற்காகவும் அத்தகைய ஊழியரிற்காக நிதியத்திற்கு அடுத்த மாதத்தின் கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்துதல் வேண்டும்.” அதற்கு முரணாக, 2021 செப்தெம்பர் முதல் 2022 மார்ச் வரையிலான காலப்பகுதிக்கான ரூபா 1,988,019 தொகையான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் கம்பனியால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | அல்லது அதற்கு முன்னரோ நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 18(4) ஆம் பிரிவு | ”கணக்காய்வு செய்யப்படும் நிறுவனமொன்று விலைப்பட்டியல் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கணக்காய்வுக் கட்டணங்களுக்கான கணக்குகளைத் தீர்ப்பனவு செய்ய வேண்டும்.” அதற்கு முரணாக, 2015/2016 முதல் 2020/2021 வரையிலான காலப்பகுதிக்குத் தொடர்புடைய ரூபா 1,979,100 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் கம்பனியால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நோர்த்-சீ லிமிட்டட் விலைப்பட்டியல் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கணக்காய்வு கட்டணத்தைச் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 50(i) ஆம் பிரிவு | பங்கு வழங்கலானது, 5 ஆம் பிரிவின் கீழ் கம்பனியை கூட்டிணைத்த உடனேயே, கம்பனி அந்த நபருக்கு உரித்துள்ள பங்கை கூட்டிணைப்பதற்கான விண்ணப்பத்தில் பெயரிடப்பட்ட ஒவ்வொரு பங்குதாரருக்கும் வழங்க வேண்டும். கம்பனி பங்குகளை வழங்கியிருந்த போதிலும், 2001 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்டு, கம்பனி சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யப்பட்டதால், அதன் பங்குதாரர்களுக்கு பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்ப டவில்லை. | பங்குச் சான்றிதழ்கள் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும். |
| 2006 மார்ச் 01 ஆம் திகதிய 09 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கை | முழுமையாக அரச உடமையாக்கப்பட்ட கம்பனிக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது, பெறுகை கையேட்டை (2006 பெறுகை வழிகாட்டல்கள் பொருட்கள் மற்றும் வேலைகளுடன் சேர்த்து பயன்படுத்தப்பட வேண்டும்) பின்பற்றுதல் வேண்டும். அதற்கு முரணாக கம்பனியானது ரூபா 40,528,467 தொகையான நூல் மூலப்பொருளை பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றாமல் கொள்வனவு செய்திருந்தது. | பதில் வழங்கப்ப டவில்லை. | கம்பனிக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது முகாமைத்துவம் பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும். |

### 1.4 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| வரிப் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (வற்) சட்டம் | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 182,799,880 தொகையான பெறுமதி சேர் வரி (வற்) கம்பனியால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், சரியான கால அடிப்படையில் வற் செலுத்தப்படாததன் காரணமாக கம்பனி ரூபா 27,963,374 தண்டப்பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் மேற்படி தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தேவையற்ற தண்டப்பணக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் உரிய வரிச் சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |
| 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) சட்டம் | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 28,580,611 தொகை கம்பனியால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், NBT ஐ சரியான கால அடிப்படையில் செலுத்தாததால் கம்பனி ரூபா 4,713,899 தண்டப்பணத்தை செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தேவையற்ற தண்டப்பணக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் உரிய வரிச் சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |

## 2. முன்னைய ஆண்டிற்கான நிதி மீளாய்வு

### 2.1 முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | 2020/2021 ரூபா | 2019/2020 ரூபா | அதிகரிப்பு/ (குறைவு) ரூபா | சதவீத அதிகரிப்பு/ (குறைவு) % |
|---|---|---|---|---|
| மொத்த புரள்வு | 243,062,940 | 260,508,899 | (17,445,959) | (6.69) |
| உற்பத்தி தொழிலாளர் | 90,947,851 | 89,694,050 | 1,253,801 | 1.39 |
| உற்பத்தி மேந்தலை | 75,749,621 | 68,705,237 | 7,044,384 | 10.25 |
| தரகுகள் | 3,128,088 | 4,433,304 | ( 1,305,216) | (29.44) |
| விற்பனை மேம்படுத்தல் | - | 79,763 | (79,763) | (100.00) |
| பணிப்பாளர் படிகள் | 2,238,009 | 1,811,456 | 426,553 | 23.54 |
| சட்ட கட்டணங்கள் | 699,000 | 289,800 | 409,200 | 141.20 |
| கணக்காய்வு குழு செலவினங்கள் | - | 27,000 | (27,000) | (100.00) |
| வாடகை | 2,000,000 | 600,000 | 1,400,000 | 233.33 |
| தண்டப்பணங்கள் | 27,727 | 17,156 | 10,571 | 61.61 |

### 2.2 முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்கான நிதி நிலைமையின் பொழிப்பு

| | 2020/2021 ரூபா | 2019/2020 ரூபா |
|---|---|---|
| இலாபம்/ நட்டம் | ( 89,278,872) | (118,160,662) |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 250,938,389 | 284,221,300 |
| நடைமுறை சொத்துக்கள் | 89,194,058 | 82,457,994 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 21,474,469 | 17,496,304 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவை | 1,132,004 | 1,591,248 |
| நடைமுறையல்லா பொறுப்பு | 482,478,567 | 469,688,332 |
| நடைமுறை பொறுப்பு | 117,410,416 | 73,312,603 |
| நீண்டகால கடன்கள் | 3,000,000 | 3,000,000 |
| கடன்கொடுத்தோர் | 68,299,901 | 64,177,709 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 247,197,644 | 248,819,172 |
| L/C கடன் கணக்குகள் | 54,828,182 | 56,399,310 |
| SLS வங்கி கடன் | 48,304,972 | 10,000,000 |
| ஊழியர் நலன்கள் | 32,359,007 | 42,786,984 |
| சம்பளக் கடன் | 28,785,649 | - |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 58,974,056 | 44,054,762 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி கட்டிட வளாகத்தை தேசிய வர்த்தக சபையிடமிருந்து குத்தகைக்கு எடுத்திருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை 2022 பெப்ரவரி 28 இல் காலாவதியாகியிருந்தது. அதனை புதுப்பிப்பதற்கு/ நீடிப்பதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும் அல்லது நீடிக்கப்பட வேண்டும். |
| தொழிற்சாலைகள் இயங்கி வருகின்ற வீரவில மற்றும் யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் கம்பனி கட்டிடங்களை நிர்மாணித்திருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரிமைத்துவமானது கம்பனியின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை அல்லது தடையின்றி இயங்குவதற்கு அது குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சட்டச் சிக்கல்கள் எழுவதைத் தவிர்ப்பதற்கும், கட்டிடத்தின் முதலீட்டைப் பாதுகாப்பதற்கும், அதே வளாகத்தில் வணிகத்தைத் தொடர்வதற்கும் காணியின் உரிமைத்துவத்தை கம்பனியின் பெயருக்குப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் 2022 மார்ச் 25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக கடற்றொழில் அமைச்சின் ஊடாக முன்மொழியப்பட்ட பதவியணியினர் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கடந்த 05 ஆண்டுகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கை உட்பட விரிவான அறிக்கை, அடுத்த 05 ஆண்டுகளுக்குள் கம்பனியால் அமுல்ப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள், உற்பத்தி, விற்பனைகள், பெறப்பட்ட வருமானம் மற்றும் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்சித்திட்டங்கள் மற்றும் கடந்த 05 ஆண்டுகளில் அவற்றின் முன்னேற்றம் மற்றும் 2022 மே 18 ஆம் திகதிய டிஎம்எஸ்/1747 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கம்பனியின் மூலோபாயத் திட்டம் என்பவற்றை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் கோரியிருந்த போதிலும் கம்பனியானது கணக்காய்வு திகதியான 2022 நவம்பர் 24 வரையிலும் சமர்ப்பித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியானது பதவியணியினரை அங்கீகரிப்பதற்காக கோரப்பட்ட தகவலை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். |